Registered as a News,,,:

When only the best is Good enough



BUY
SOLIDE Pumps




# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50



தரமானதே சிறந்தது என்றால்



★ சொலிட் ★
பம்பையே வாங்குங்கள்



சுடர் 22: யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 29 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 19 (14 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 249


# இயக்கங்களே! மோதலை நிறுத்துங்கள்!!

# பிரச்சினைகளை பேசித் தீர்வு காணுங்கள்!!!

## பயங்கரவாத சந்தேக நபர்கள் மீதான வழக்குகள் வாபஸாகும்

கொழும்பு, செப். 14

நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பயங்கரவாத சந்தேக நபர்கள் மீதான வழக்குகள் திங்கள் முதல் படிப்படியாக வாபஸ்வாங்கப்படும்.

இப்படி சட்டமா அதிபர் திணைக்களம் உறுதியளித்ததாக சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வழக்குகள் கொழும்பில் உள்ள ஐந்து மேல் நீதிமன்றங்களில் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும்போது அவை வாபஸ் வாங்கப்படும் என்று திணைக்களம் தெரிவித்ததாக திரு. குமார்பொன்னம்பலம் தெரிவித்தார். [இ-எ]

## இல்லையேல் மக்கள் வெறுப்பர்; ஈரோஸ் பிரமுகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 14

இயங்கங்களே! உங்களுக்குள் மோதிக்கொள்வதை நிறுத்துங்கள் பிரச்சினைகளை — முரண்பாடுகளை பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள். இல்லையேல் மக்கள் உங்களை வெறுப்பார்கள். உட்பூசல்களை வளர்ப்பதும், மோதுவதும் பொது எதிரிக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கும். போராளிகளின் தியாகத்தைக் குறைத்து எடைபோட உதவும்.

இவ்வாறு ஈழவர் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று திரு. செ. எட்வேர்ட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஈரோஸ் பிரமுகர் வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும், இயக்கங்களிடையே இடம்பெற்று வரும் மோதல்கள், ஆட்கடத்தல், திட்டமிட்ட கொள்ளைகள் குறித்துக் கவலை தெரிவித்தனர். அவற்றை நிறுத்த ஈரோஸ் இயக்கமும், ஈழவர் முன்னணியும் முன்னின்று உழைத்தால் என்ன என்று கேள்வியும் எழுப்பினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரிமொதி அனுரா சந்திப்பு

கொழும்பு, செப். 14

பிரிட்டிஷ் அமைச்சர் ரிமொதிறென்ரன் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்தார்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தைச் சுதந்திரக் கட்சி ஏன் எதிர்க்கின்றது என்பது பற்றிய காரணத்தை திரு. அனுரா பண்டாரநாயக்கா பிரிட்டிஷ் அமைச்சரிடம் விளக்கினார். (ஓ-எ)

## கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகம் வேண்டாம் என்கிறார் தேவா

கொழும்பு, செப் 14

கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகம் வேண்டாம்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் கோரப்பட்டுள்ளது.

அமைச்சர் தேவநாயகம் தலைமையில் கிழக்கு மாகாண எம்பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

அப்போதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே சிவில் நிர்வாகம் உண்டு. ஆகவே இடைக்கால நிர்வாகம் தேவைப்படாது என்று அமைச்சர் தேவநாயகம் தலைமையிலான குழு தெரிவித்தது. (இ-எ)

## மன்னரில் புதிதாக மோதல்கள்

### போராளிகள் தரப்பில் ஐந்து பேர் வரை பலி

யாழ்ப்பாணம், செப். 14

மன்னார் மாவட்டத்திலும் இரண்டு போராளிகள் குழுக்களிடையே மோதல்கள் மூண்டுள்ளன.

நேற்றுக் காலை 5 மணி அளவில் ஆரம்பமான இந்த மோதல்கள் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தன

இந்த மோதல்களின் போது இரண்டு போராளிகள் தரப்பிலும் ஐந்து பேருக்கு மேல் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

நேற்றுக் காலை ஐந்து மணி அளவில் மன்னாரில் இருந்து 25 மைல்களுக்கு அப்பால் உள்ள வெள்ளாங்குளம் மூன்றும்பிட்டி என்ற இடத்தில் போராளிகள் குழு ஒன்று தங்கியிருந்த வீடு ஒன்றின் மீது மற்றொரு போராளிகள் குழு தாக்குதல் நடத்தியது. துப்பாக்கிகளும், ரொக்கட் மோட்டார்களும் இத் தாக்குதலில் பாவிக்கப்பட்டன.

இப் பகுதி வீடுகளில் இருந்து எவரும் வெளியே வரக்கூடாது என்று மோதலின் போது போராளிகள் பொதுமக்களை எச்சரித்திருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரமாக நடைபெற்ற இத் தாக்குதலின் போது இரு தரப்பிலும் ஐந்து பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மோதல் இடம்பெற்று இரண்டு மணித்தியாலம் வரை இந்திய அமைதி காக்கும் படை அங்கு வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இருதரப்பு மோதல்களுக்கும் இடையில் அகப்பட்ட பெண் ஒருவர் பலத்த காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோதல் ஆரம்பமானபோது அப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

கனகசபை சாரதாம்பாள் (வயது 45) என்ற பெண்ணே காயமடைந்தவராவார். (இ-10)

### இரத்தம் உறைந்த நிலையில் 3 சடலங்களைக் கண்டேன்

### மன்னார் சம்பவத்தை நேரில்கண்டவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 14

"கடற்கரைப் பகுதியில் மூன்று சடலங்கள் இரத்தம் உறைந்த நிலையில் கிடந்ததை நான் கண்டேன்.

மன்னார் வெள்ளாங்குளம் மூன்றும்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற இரு இயக்கங்களுக்கு இடையிலான மோதலை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற பிலிப் அந்தோனிப்பிள்ளை என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த இயக்க மோதலின்போதுகாயமடைந்த பொதுமக்களில் ஒருவரான சனகசபை சாரதாம்பாள் என்ற பெண்ணை பிலிப் அந்தோனிப்பிள்ளை யாழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

14-09-1987
திங்கட்கிழமை
ஆவணி 29

சுபநேரம்:
12 03 முதல் 1.33 வரை

ராகுகாலம்:-
7.33 முதல் 9.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

**முச்சந்தி முரளி**



அரசாங்கம் எல்லை குடியேற்றத்தின் மூலம் எடுக்கிறது போதாது எண்டு சுவீகரிப்பின் மூலமும் அபகரிக்க நினைச்சிட்டினம்...! அவ்வளவு தான்...!

## இளிநொச்சிப் பகுதியில் மோதல் தொடர்கிறது

இளிநொச்சி, செப். 14

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இயக்க மோதல்கள் மேலும் நீடித்துள்ளன. மோதல்களின் விளைவாக இதுவரை ஆறு பேர் கொல்லப்பட்டனர். ஒரு இயக்கத்தின் சுரடிப் போக்குக் காரியாலயம் சேதமாக்கப்பட்டு தஸ்தாவேஜுக்கள் வீதியில் வைத்துஎரிக்கப்பட்டன.

மேலும் பரந்தன். இரணைமடு ஆகிய இடங்களில் சில இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் இருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில் இயக்கம் ஒன்றின் அலுவலகங்கள் தாக்கப்பட்டதன் எதிரொலியே புதிய மோதல் சம்பவங்கள் ஆகும்.

சனிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சி பஸ்டிப்போ சந்தியில் மாற்று இயக்கம் ஒன்றின் கிளிநொச்சி மாணவர் அமைப்பைச் சேர்ந்த ராஜேந்தர் என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது சடலம் பொது மக்களால் எடுத்துவரப்பட்டுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

இதேவேளை வெள்ளிக்கிழமை இரவு கிளிநொச்சியில் இயக்க அலுவலகம் ஒன்றில் இடம்பெற்ற மோதலில் இறந்த பொதுமக்களில் ஜெயந்தி நகரைச் சேர்ந்த மாணிக்கம் மோகன், அச்சுவேலியைச் சேர்ந்த ராஜன்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டமானும் யாழ் வருகிறார்

கொழும்பு, செப் 14

இம்மாதக் கடைசியில் அமைச்சர் தொண்டமான் யாழ் மாவட்டத்துக்கு விஜயம் செய்ய இருக்கின்றார்

கால் நடை வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதுபற்றிஆராயவே அமைச்சர் இவ்விஜயத்தை மேற்கொள்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-எ)

### கிளிநொச்சி சம்பவம்பற்றி புலிகள்

யாழ்ப்பாணம், செப். 14

நேற்றுப் பிற்பகல் 2-00 மணி அளவில், கிளிநொச்சி பஸ் டிப்போவுக்கு அருகாமையில் வைத்து கிளிநொச்சிப் பிரதேச விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளருமான ராஜேந்தர் [பகீரதன்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 3,000 பேர் காவலில்

கொழும்பு, செப். 14

இலங்கை— இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தென் இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து சுமார் 3 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சினிமா கட்டணம் உயரும்

கொழும்பு, செப். 14

அடுத்த மாதம் முதல் திகதி தொடக்கம் சினிமாப் பட மாளிகைகள், டிக்கட் கட்டணத்தை ஐந்து சதவீதமாக அதிகரிக்கவுள்ளன.

தியேட்டர் உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. [ஓ-எ]

### யாழ் பல்கலை விவசாய பீடம் கிளிநொச்சியில்

கொழும்பு, செப். 14

யாழ் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் நிறுவுவதற்காக கிளிநொச்சியில் 25 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

## உத்தேச மாகாண சபைக்குச் சேரவேண்டிய

# திருமலை நகரின் 5,150 ஏக்கரை

# அபகரிக்க மறைமுக நடவடிக்கை

— திருமலையிலிருந்து உதயனின் சிறப்புப் பிரதிநிதி —

திருகோணமலை செப்14.

திருகோணமலை துறைமுகத்தை உத்தேச மாகாணசபையின் கீழ் இல்லாமல் மத்திய அரசின் நேரடிக்கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் திட்டத்தின் மூலம் திருகோணமலை நகரத்திலும் அதை அண்டிய பகுதியிலும் உள்ள பெரும்பகுதியைஉத்தேச மாகாண சபையிடம் இருந்து பறிப்பதற்கு மறைமுக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

முதல் நடவடிக்கையாக திருகோணமலை நகரத்திலும், அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் பாவிக்கப்படாமல் தரிசு நிலங்களாக இருக்கும் அரசகாணிகளில் ஒருபெரும்பகுதி- 5,150 ஏக்கர் நிலம் இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்திடம்ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

துறைமுக சபையிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இந்த நிலத்தின் விஸ்தீரணம் திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் பகுதியின் விஸ்தீரணத்துக்குச் சமமானது என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை துறைமுகம்மத்திய அரசின்நேரடிக்கண் காணிப்பின் கீழ் வரும்போது இந்தக் காணிகளும் நேரடியாக மத்திய அரசின் கீழ் வந்துவிடும்.

இதன்மூலம் திருகோணமலை நகரின் பெரும் பகுதி மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும். (உ)


மங்களகரமான திறப்பு விழா

★ நியூ ஸ்ரான்லீஸ் ★
(New Stanley's)

பெயின்ட் வகைகள், இரும்புச் சாமான்கள் விற்பனை நிலையம்.

இன்று 14-09-1987 திங்கட்கிழமை
பகல் 12-30 மணிமுதல் பி. ப. 2-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் திறந்து வைக்கப்படும்.

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22135



இளைய தலைமுறையின் ... கவரும் இன்றைய நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கல்முனையில்

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டும் முயற்சியில் போராளிகள்

மட்டக்களப்பு, செப். 14

கல்முனையில் தமிழ் — முஸ்லிம் சமூக ஒற்றுமையை நிலைநாட்டுவதில் சமூக, சமய, அரசியல் பிரமுகர்களுடன் தமிழ்ப் போராளிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள், புளொட், ஈ. பி. ஆர். எல். எப். அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் சமூக, சமய, அரசியல் பிரமுகர்களைத் தனித் தனியாகச் சந்தித்து சமூக ஒற்றுமை குறித்து உரையாடி வருகிறார்கள்.

சில தீயசக்திகள் மேற்கொள்ளும் இச்செயலுக்கு இருசமூகமும் பலியாகக்கூடாது என இவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

முதல்நாள் நடந்த அசம்பாவிதங்களால் கல்முனையில் இரு அரிசிஆலை, பெற்றோல் நிலையம், 15 கடைகள். லொறிகள் உட்பட தனியார் உடைமைகள் சேதமாக்கித் தீக்கிரையாக்கப்பட்டன. சேதங்களின் பெறுமதி சுமார் 75 லட்சம் ரூபா வரை இருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2ஆம்நாள் 3-ஆம் நாள் (இச்செய்திஎழுதும்வரை) எவ்வித அசம்பாவிதங்கள், வன்செயல்கள் இடம்பெறாத போதிலும் மக்கள் மத்தியில் பயம், பதற்றம், பரபரப்புத் தணியவில்லை.

எல்லைக் கிராமங்களில் இந்திய அமைதி காக்கும் படை - ஸ்ரீ லங்கா பொலிஸ் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ரோந்து சேவையும் இணைந்துதான் மேற்கொள்கின்றனர்.

கல்முனையில் மட்டும்தான் வன்செயல்கள் இடம்பெற்றன. இவ்வன்செயல்கள் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று பகுதிகளுக்குப் பரவவில்லை.

கலவரம்பரவுவதற்குச் சில தீயசக்திகள் எடுத்த முயற்சிகள் சமாதான முயற்சியில் ஈடுபட்ட பிரமுகர்களால் முறியடிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-21)

## நல்லூர் சாயி இல்லத்தில் கிருஷ்ண ஜெயந்தி

யாழ்ப்பாணம், செப். 14

நல்லூர், பகவான் ஸ்ரீ சத்திய சாயி இல்லத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை வரை பஜனை, அபிஷேகம், ஓங்காரம் அஷ்டோத்திரம், சுப்பிரபாதம், கீதாசாரத் தாலாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்

நகரசங்கீர்த்தனம், மஹா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சிகள் முடிவடையும். (இ-எ)

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

சாவகச்சேரி, செப். 14

நேற்று ஆரம்பமாக இருந்த தந்தை செல்வா நினைவுக்கேடய கரபந்தாட்டச்சுற்றுப்போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் 25 ஆம் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் தொடர்ந்து நடைபெறும் என அறவழிப் போராட்டக் குழு அறிவித்துள்ளது (இ-31)

## மக்கள் முகம் — நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செப். 14

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சகாய நிதிச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ. குஞ்சிதபாதம், செயலாளர்: க. கனகசிங்கம், பொருளாளர்: மு. நல்லையா, உப தலைவர்கள்: திருமதி. க. செல்வநாயகம், செ. சுப்பிரமணியம், உப செயலாளர்: தி. கணேசராசா.

செயற் குழு உறுப்பினர்கள் எழுவரும் தெரிவாகியுள்ளனர். (ஒ)

## உலக தரிசன நிறுவன இலங்கைப் பணிப்பாளர் இன்று யாழ் வருகை

யாழ்ப்பாணம், செப். 14

அகில உலக தரிசன நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் திரு. பீற்றர் பெரி இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வர உள்ளார்.

இவருடன் உலகதரிசன நிறுவனத்தின் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றும் வரவுள்ளது.

இவர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இடங்களையும் சுற்றிப் பார்வையிடுவர்.

இன்று காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரைச் செயலகத்தில் சந்திப்பர். அதன் பின்பு கிறிஸ்வ சபைகளின் தலைவர்களைச் சந்திப்பர்.

பிற்பகல் 4 30 மணிக்கு குருநகர் சென் ஜேம்ஸ் தேவாலயத்தில், பாதிக்கப்பட்டவர்களையும், 'பதிக்கப்பட்டோர்' ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் சந்திப்பார்கள்,

நாளை செவ்வாய்க்கிழமை பாதிக்கப்பட்ட இடங்களை இவர்கள் பார்வையிடுவர். (இ)

## காவலில் எத்தனை பிக்குகள்?

கொழும்பு, செப். 14

தடுப்புக் காவலில் எத்தனை பௌத்த பிக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற புள்ளி விவரத்தை பொலிஸார் சேகரித்து வருகின்றனர். [இ-எ]

## திபாவளியுடன் 10 திரைப்படங்கள்:

## கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரே தினங்களில் திரையிடப்படும்

யாழ்ப்பாணம்செப்.14

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் தென் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் தமிழ் திரைப்படங்கள் கொழும்பில் திரையிடப்படும் தினம் யாழ்ப்பாணத்திலும் திரையிட தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் தீபாவழிப் பண்டிகைக்கு இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ள பத்து தமிழ்த்திரைப்படங்கள் கொழும்பில் திரையிடப்படும் நாளில் யாழ்ப்பாணத்தில் திரையிடப்படவிருக்கிறது.

திரைப்படங்கள் விபரம் வருமாறு

அர்த்தமுள்ள ஆசைகள்.

நல்லபாம்பு.

பொய்ச்சாட்சி.

நானும் ஒரு தொழிலாளி.

பூவே இளம் பூவே.

இராமன் ஸ்ரீராமன்.

ஆனந்த ஆராதனை.

சின்னப்பூவே மெல்லப் பேசு.

பூவிழி வாசலிலே.

நம்மவூரு நல்லவரு. (இ-91)

## விற்பனை அபிவிருத்தி திணைக்கள கடைகளில் குறைந்த விலையில் பொருள்கள்

யாழ்ப்பாணம் செப். 14

பாவனையாளரின் நன்மை கருதி இன்று திங்கட்கிழமை முதல் விற்பனை அபிவிருத்தி திணைக்கள மக்கள் கடைகளில், பால் மா, கறிச் சரக்குகள் பழரசம், தானியவகைகள், கருவாடு, போன்ற பொருள்களை சந்தை விலையிலும் பார்க்க மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்காக சகல பொருள்களும் தாராளமாகத் தருவிக்கப்பட்டிருப்பதாக மேற்படி திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார். (த-எ)

## செய்திக்கொத்து

### அணைக்கட்டு நிர்மாண வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.14

திருக்கேதீச்சரம்கிராம அபிவிருத்திச் சங்க முயற்சியால் ஏழாம் கல் தொடக்கம் கோட்டைக்காடு கடற்கரை வரையுள்ள பாரிய அணைக்கட்டு நிர்மாணிக்கும் வேலை இம்மாதம் முதல் வாரத்தில் தொடக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் உதவியும் அளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துமேலும் இப்பணியைச் செய்து முடிக்க உதவுமாறு சங்கத் தலைவர் திரு. அ. திருநாவுக்கரசு கேட்டுள்ளார் (இ-சி)

### பாதயாத்திரை குழு விஜயம்

கொடிகாமம்,செப்.14

பாடசாலைத் தருமவாரத்தை ஒட்டி தென்மராட்சித் திருத்தலங்களைத் தரிசித்து வரும் தென்மராட்சிப் பாதயாத்திரைக் குழுவினர் கொடிகாமம் அரசினர் பாடசாலைக்கு விஜயம் செய்தனர்.

குழுவின் தலைவர்ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தருமத்தின் மகத்துவம் பற்றி மாணவர் மத்தியில் உரை நிகழ்த்தினார். (இ-75)

### பொதுக் கிணறு

கிளிநொச்சி, செப். 14

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொது இடங்களில் பொதுக் கிணறுகள் வெட்டும் பணிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-76)

### வீட்டுத் திட்ட கடனுதவி

கிளிநொச்சி, செப். 14

கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் இயங்கி வரும் வரத விநாயகர் ஐக்கிய நாணயச் சங்கம் இவ்வாண்டு பத்து லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் பத்துப் பேருக்கு கடனுதவி வழங்கி உள்ளது. இதே வேளை மேலதிகமாக தங்கள் கையிருப்பில் இருந்து சுமார் 500 ரூபாவை தங்கள் அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கி வருகிறது. (இ-76)

### லொறி, ஜீப்

கிளிநொச்சி, செப். 14

வடக்கு - கிழக்கு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கிளிநொச்சி மாவட்ட வேலைகளை கவனிக்கவென கிளிநொச்சி மாவட்ட சுமநலசேவைகள் திணைக்களத்திற்கு ஒரு லொறி, ஒரு ஜீப்ஆகியன கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன.

### குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி, செப். 14

சாவகச்சேரி, பருத்தித்துறை நகரங்களுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாகத் தெரியவருகிறது.

சுமார் மூன்று வருட காலமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த வேலைகளை மீண்டும்ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்க அதிபர் உட்பட தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இத்திட்டம் அமெரிக்க நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடக்கூடியதாகும்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கைதிகள் விடுதலைக்கு போராட்டம் நடத்துவோம்

யாழ்ப்பாணம். செப். 14

சிறையில் வாடும் தமிழ் கைதிகளை விடுதலை செய்யக் கோரி போராட்டம் நடத்த மாணவர் இளைஞர் பொதுமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினது இனஅழிப்பு நடவடிக்கைகளின் கீழ் தமிழ்பேசும் மக்கள் கொடூரமான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரக்கணக்கானோர் அவயவங்களை இழந்தும் உள்ளனர்.

இருந்தும் தற்போது ஏற்பட்டுள்ள ராஜீவ்-ஜே ஆர் ஒப்பந்தத்தின் பின்னரும்கூட சிறிலங்கா அரசு ஒப்பந்தத்தை ஏற்று நடக்கவில்லை.

ஒப்பந்தத்தின் 2 : 11 ஆவது பிரிவின்படி பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது

இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்ட பின்னரும்கூட தடுப்புக் காவலில் கைதிகள் பலர் காரணமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்வதற்கு விரும்பாத சிறிலங்கா அரசு அதனை வேண்டுமென்றே காலம் கடத்தி வருகின்றது.

வெலிக்கடை பெல்வத்தை போன்ற தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் தமது விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கொலைவெறி பிடித்த சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் பூஸா முகாமில் சித்திரவதைகளை தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, செப்.14

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமைஇடம் பெற விருக்கிறது.

கல்லூரி அருணாசலம் மண்டபத்தில்நடைபெற இருக்கும் இவ்வைபவத்தில் முதன்மை அதிதியாக யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப். எப் எம்.மன்சூர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு அதிதியாக உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளையும் கௌரவ அதிதிகளாக வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. தங்கராசா விஞ்ஞானக் கல்வி அதிகாரிதிருமதிபி கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.(இ-31

## நெருக்கடியான நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அளப்பரிய சேவை புரிந்தன

### உதவி ஆணையாளர் கூறுகிறார்

தாளையடி, செப். 14

வடபகுதிக் கூட்டுறவுச்சங்கங்கள் கடந்த நான்கு வருட நெருக்கடி நிலையில் பொது மக்களுக்குப் பல்வேறு துறைகளிலும் அளப்பரிய உதவிகளைப் புரிந்துள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாதிருந்தால் கடந்த நான்கு வருட காலத்தின் போது வடபகுதி மக்கள் கடலில் அமிழ்ந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணித்த கூட்டுறவு மண்டபத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில்அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

கடந்த நான்கு வருடங்களாக வடபகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு விநியோகத்தை மட்டும் பொது மக்களுக்குச் செய்து வரவில்லை.

வடக்கில் வங்கிகள் செயற்படாமலிருந்த அந்தக்காலப் பகுதியில் பென்சன் வழங்கல், அரசாங்கஊழியர்களுக்கான சம்பள காசோலைகளைப் பணமாக்கிக் கொடுத்தல் ஆகிய பல்வேறு கருமங்களையும் ஆற்றி வந்துள்ளது.

வடக்கில் கூட்டுறவுச் சங்கங்கள் பொது மக்களுக்கு ஆற்றி வந்த சேவைகளை அண்மையில் கூட்டுறவு அமைச்சரைச் சந்தித்து எடுத்துக்கூறிய போது, தாம் ஆச்சரியமடைவதாகவும், நம்ப முடியாததாக இருப்பதாகவும் கூறினார்.

மற்றும் பலரும் உரையாற்றினர். (ஒ-144)

## கிழக்கிலங்கை வன்செயலில் உழைப்பாளியை இழந்த குடும்பத்துக்கு நிதியுதவி

### பேராசிரியர் சிவத்தம்பி தகவல்

மட்டக்களப்பு, செப். 14

கிழக்கிலங்கையில் வன்செயல்கள் காரணமாக பிரதான உழைப்பாளிகளை இழந்த குடும்பம் ஒன்றுக்கு உடனடி நிவாரணமாக தலா 1,000 ரூபா வழங்கப்படும்.

இத்தகவலை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட விஜயத்தின் பின்பு செய்தியாளர்களைச் சந்தித்து [illegible] அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்த உதவி தேவைப்பட்டால் மேலும் உதவி வழங்கப்படும்.

பூஸா, உட்பட தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையானவர்களுக்கு இலவச வைத்திய உதவிகள் வழங்கப்படும்.

அகதி புனர்வாழ்வு அலுவல்கள் அம்பாறை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-21)

## 441 பூஸா இளைஞர்கள் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, செப். 14

பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட இளைஞர்கள் 441 பேர் திருமலை வழியாக வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்பு வந்தடைந்தனர்.

இ.போ.ச. பஸ் மூலம் இந்தியப் படையினரால் அழைத்து வரப்பட்ட இவர்கள் பிரசைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-21)

## சம்பந்தன் திருமலை திரும்புவார்

யாழ்ப்பாணம், செப் 14

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் திருமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் விரைவில் திருமலை திரும்புவார்.

சென்னையில் தங்கியிருக்கும் இவர் தனது குடும்பத்தவருடன் மீண்டும் திருமலையில் வசிப்பதற்கான ஏற்பாடுகளை குடும்ப உறவினர்கள் தற்போது மேற்கொண்டுள்ளார்கள்.

இவரது வீடு, உடமைகள் 1983 கலவரத்தில் [illegible]ப்பட்டன. [illegible]

## தாக்குதல் சம்பவம்

நால்வர் சேர்ந்து ஒருவரைத் தாக்கினர்.

இச்சம்பவம் கொடிகாமச் சந்திக்கு அருகில் இடம் பெற்றது.

தாக்கப்பட்டவர் உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அமைதிப் படையினர் சந்தேக நபர்களைக் கைது செய்து, [illegible] கொண்டு சென்றனர். (இ-75)

## யாழ் மாவட்டத்தில் இட மாற்றம் பெற்ற கிராமசேவை அலுவலர்கள்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ் மாவட்டத்தில் இம்மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ள கிராம சேவை அலுவலர்களது பெயர்களும் அவர்களுக்குரிய இடங்களும்.

(முன்னைய தொடர்ச்சி)

திரு. எஸ். வசந்த குமார் கோண்டாவில் மேற்கு.

திரு. எஸ். கனகலிங்கம் கோண்டாவில் கிழக்கு.

திரு. எஸ். ஜெகதீஸ்வரன் கொக்குவில்கிழக்கு.

திரு. பி. தர்மபாலன் கொக்குவில் மேற்கு.

திரு. கே. யோகேஸ்வரன் கொக்குவில்மத்தி.

திரு. என். பற்குணராஜா சுதுமலை.

திரு. வி. சுந்தரராஜா ஆனைக்கோட்டை.

திரு. பி. சிவபாதசுந்தரம் உயரப்புலம்.

திரு. ஐ. நித்தியானந்தன் நவாலி.

திரு. ரி. சபாரத்தினம் மானிப்பாய்.

திரு. எஸ். கந்தசாமி சண்டிலிப்பாய்.

திரு. வி. சுந்தரலிங்கம் மாகியப்பிட்டி.

திரு. ரி. நித்தியானந்தன் சங்கானை வடக்கு

திரு. பி. துரைராஜா பண்டத்தரிப்பு.

திரு. பி. கபிரியேல் பிள்ளை சில்லாலை.

திரு. எஸ். சுந்தரமூர்த்தி மாதகல்.

திரு. எஸ். பி. யோகராஜா மாதகல் கிழக்கு.

திரு. வி. நடராசா பெரியவிளான்.

திரு. ஏ. முருகேசு வட்டுக்கிழக்கு.

திரு. ஆர். சந்திர குமார். சங்கரத்தை.

திரு. வி. ரி. கதிர்காம நாதன் அராலி வடக்கு

திரு. கே. ஜெகதீஸ்வரன் அராலி மேற்கு.

திரு. பி. தர்மகுலசேகரம் அராலி (தெ.கி)

திரு எஸ். நாகரத்தினம் வட்டுக்கோட்டை தெற்கு.

திரு. கே. சிறிகரன் வட்டு மேற்கு.

திரு. கே. தர்மலிங்கம் தொல்புரம்.

திரு. எஸ். வைத்தியநாதன் பொன்னாலை.

திரு. எஸ். கே. பாலசிங்கம் மூளாய்.

திரு. எம். தர்மதாசன் சுழிபுரம் மேற்கு.

திரு. வி. இரத்தினம் சுழிபுரம் கிழக்கு.

திரு. ரி. இராசபாலன் சங்கானை கிழக்கு.

திரு. என். சந்திரசேகரம்பிள்ளை சங்கானை தெற்கு.

வெற்றிடம் சங்கானை மேற்கு.

(தொடரும்)

## யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் மோதல்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ் பஸ் நிலையத்திலும் வாள், கத்தி என்பனவற்றுடன் மோதல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

சனி மாலை யாழ்பஸ் நிலையத்தில், அங்காடி வியாபாரிகள்இருவருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து மோதல்களில் வாள், கத்தி என்பனவும் கொண்டுவரப்பட்டன.

இதனால் பொதுமக்கள் மத்தியில் சற்றுப் பதற்றம் நிலவியது.

எனினும் பொதுமக்கள் தலையீட்டினால் மோதல் உக்கிரமடையவில்லை. (இ-10)

## காலத்தின் தேவையை ஒட்டிய நூல் வெளியீடு

கொக்குவில், செப். 14

ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு ஒரு நோக்கு எனும் நூல் வெளியிடப்படுவது, காலத்தின் தேவையை ஒட்டி எழுந்த ஒரு செயலாகும். இப்படியான வரலாறுகள் இலங்கையில் தமிழர் வந்தேறுகுடிகள் அல்ல என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு சி. சிவசரவணபவன் (சிற்பி), ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு - ஒரு நோக்கு எனும் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இரா. வை. கனகரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழா ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஞான பண்டிதர் திரு.மு. தந்தையா தலைமையில் நடைபெற்றது. (இ-66)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உண்மை இருக்கும் இடத்தில் அழகும் இளமையும் பொழியும்.

சுவாமி கங்காதரானந்தா

உதயன்
உண்மை - அச்சாமை - நடு நிலைமை
இல:- 892/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22078
14.9.1987 தபெ.இல: - 83

# புதிய போராட்டம் உடனடி அவசியம்

தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம். போராளிகள் இயக்கங்கள் மோதிக்கொள்ளுதல். கிழக்கில் தமிழர்-முஸ்லிம்கள் மோதல்.

இந்த மூன்று விவகாரங்களும் தான் இப்போது தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கி இருக்கும் உடனடியான பேராபத்துக்கள்; இவை குறித்துத்தனித்தனியாக ஏற்கனவே அவ்வப்போது இங்கு எழுதியிருந்தோம்.

இந்த மூன்று விவகாரங்களும் தொடர்கின்றன. ஒன்றுக்கு மற்றது தொடர்புடையதாகவும் இருக்கிறது. ஆகையால் அவற்றை வரிசைப்படுத்தி வைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் உண்டு.

வடக்கில், முல்லைத்தீவிலும், கிழக்கில் திருமலையிலுமே சிங்களக் குடியேற்றங்கள் நடப்பதாக முன்னர் செய்திகள் வந்தன. ஆனால் இப்போது தமிழ் மாவட்டங்கள் எதுவும் விதிவிலக்கல்ல என்ற கடைசிக் கட்ட ஆபத்து உருவாகி இருக்கிறது.

வடக்கில் வவுனியாவின் எல்லைப்பகுதிகளிலும், மட்டக்களப்பின் எல்லைப்பகுதிகளிலும், சிங்களக் குடியேற்றங்கள் குவிகின்றன. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசமான இறக்காமத்திலும் சிங்களக் குடியேற்றங்கள் நடந்திருக்கின்றன.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதச்செய்து, அவர்களது கவனத்தை—அக்கறையை அதில் ஈர்த்துவிட்டு, இறக்காமத்தில் சிங்களக் குடியேற்றம் நடந்திருக்கிறது; நடக்கிறது.

அநேகமான அவசரக் குடியேற்றத் திட்டங்கள் அரசாங்கத்தின்— அரசாங்க அதிகாரிகளின் அனுசரணையுடனும் ஆதரவுடனுமே நடக்கின்றன. அதேவேளை—

தமிழர் - முஸ்லிம்களை மோதவிட்டு, அவர்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவது தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிரான வெளிச் சக்திகளின் சதியாக இருக்கும் எனச் சந்தேகிக்க இடமுண்டு.

அதே போன்று தமிழ்ப்போராளிகள் குழுக்களுக்கு இடையேயான மோதல்களையும் வெளிச்சக்திகள் தூண்டிவிட்டிருக்கலாம் என நம்ப இடமுண்டு.

போராளிகளை மோதவிடுவதால் அவர்களை அழிக்கும் நோக்கத்தையும், அவர்கள் கவனத்தை அதில் ஈர்க்கச் செய்து சிங்களக் குடியேற்றங்களை சுலபமாகச் செயற்படுத்தும் நோக்கத்தையும் அடைய அந்த நாசகார சக்திகள் முயன்று வருகின்றன எனலாம். அதாவது ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தும் தந்திரோபாயத்தை அவை கையாளுகின்றன.

இந்த நாசகார சக்திகள் ஒரே திசை இருந்து வந்தவையாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒவ்வொன்றும் தங்கள் இலட்சியங்களை - அடைவதற்காக தனித்தனியே இயங்கவும் இடமுண்டு.

ஆனால் ஒவ்வொன்றும் தமது தமிழ் விரோத, தமிழ் பேசும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத இலட்சியங்களை அடைவதற்காக உள்நாட்டில் சில கும்பல்களை —கையாட்களை - வைத்துச் செயற்படுகின்றன என்பது மட்டும் நிச்சயம்.

சிங்களக் குடியேற்றம், போராளிகள் மோதல்கள், தமிழர் - முஸ்லிம் மோதல்கள் என்பனவற்றை அந்தக் கும்பல்களே தோற்றுவிக்கின்றன. நாசகாரச் சக்திகளின் கையாட்களின் சூழ்ச்சிக்கு இயக்கத்தினர், தமிழர்கள் முஸ்லிம்கள் ஆகியோரில் சிலர் இரையாகி வருகின்றனர்.

குடியேற்றம் குறித்து ஒப்பந்தத்தில் எதுவுமில்லை. அதனால் அது குறித்து நடவடிக்கை எடுக்க முடியாது, என்று அமைதிப்படை அதிகாரிகள் கையை விரிக்கிறார்கள்.

அதனை ஏன் தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியாது? தமிழ் பேசும் மாவட்டங்களில் எல்லைப் புறங்களில், வெறுமனே கிடக்கும் இடங்களில் தமிழர்குடியேற்றத் திட்டங்களை உருவாக்கினால் என்ன?

தமிழ் பேசும் பகுதிகளில் அவற்றின் எல்லைகளில், தமிழ்க் குடியேற்றங்களை உருவாக்குவதை ஒரு போராட்டமாகவே நடத்தலாம். போராளிகள் தங்களுக்குள் போர் நடத்துவதைத் தவிர்த்து,இந்தப் புதியபோரில் கவனத்தைச் செலுத்தினால் அது அழிவுக்குப் பதில் ஆக்கமாக இருக்கும்.

புதிய போராட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்கி அவர்களின் ஆதரவோடு அதனை நடத்தலாம்.

அதே போல தமிழர் — முஸ்லிம்கள் மோதல்கள் தவிர்க்கப்பட்டு இரு சாராரும் தமது மண் பறிபோகாமல் காப்பாற்றுவதற்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டும். புதிய குடியேற்றங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

இந்த ஏட்டிக்குப் போட்டி முயற்சி வெளிச் சக்திகளின் — நாசகாரச் சக்திகளின் நோக்கத்துக்கு ஆப்பாக அமையலாம் அல்லவா? அது தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் மூன்று மூக்கிய ஆபத்துக்களையும் போக்கவும் உதவும்.

★ எல்லையில் கிளர்ச்சியை அடக்க

# பர்மா-இந்தியா கூட்டு இராணுவ நடவடிக்கை!

புதுடில்லி, செப்டெம்பர் 13

பர்மா - இந்திய எல்லைப் புறத் கலவரத்தில் ஈடுபட்டுள்ள பழங்குடிக் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக கூட்டு இராணுவ நடவடிக்கைகளை எடுக்க முன்வருமாறு இந்தியா பர்மாவைக் கேட்டுள்ளது.

கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் இப்பழங்குடியினர் பர்மாக் காடுகளில் மறைந்து இருந்து செயல்படுவதாக இந்தியா தெரிவிக்கிறது.

இக்கிளர்ச்சிக்காரர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்திய - பர்மா கூட்டு இராணுவ நடவடிக்கை அவசியம் என்று இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் வலியுறுத்தியிருக்கின்றார்.

இதுசம்பந்தமான பேச்சுக்களை நடத்த பர்மா வெளியுறவு அமைச்சர் நேற்று (ஞாயிறு) புதுடில்லி வருவதாக இருந்தது. (இ-எ)

## இந்திரா கொலை வழக்கு அப்பீல் மனு விசாரணை

புதுடில்லி, செப் 13

இந்திராகாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூன்று எதிரிகளும் செய்து கொண்ட அப்பீல் மனு இம்மாதம் 22ஆம் திகதி புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது.

இதனிடையில் எதிரிகளில் ஒருவரான சத்வன் சிங் தனது முதுகுத் தண்டில் பதிந்துள்ளகுண்டை எடுக்க வைத்திய வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்று செய்த விண்ணப்பம் கடந்த வாரம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அந்தக் குண்டு உடலில் இருப்பதால் தன்னால் நித்திரை செய்யவோ, நிற்கவோ, நடக்கவோ முடியாதிருப்பதாக சத்வன்சிங் விண்ணப்பத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

எதிரிதரப்பினர் கூறும் டாக்டர்களில் மூவர் அங்கம் வகிக்கும் வைத்திய குழுவினால் எதிரியைப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் புதுடில்லி நிர்வாகத்துக்கு உத்தர விட்டது (இ-எ)

## கனடா உளவு ஸ்தாபன தலைவர் ராஜினமா!

ஒட்டாவா, செப். 13

கனடா உளவு ஸ்தாபனத் தலைவர் தனது பதவியை ராஜினமாச் செய்து விட்டார்.

இந்திய அமைச்சர் ஒருவரைக் கனடாவில் வைத்து சீக்கியத் தீவிரவாதி ஒருவர் கொலை செய்ய முயற்சித்த சம்பவம் பற்றிய விசாரணை தொடர்பாகவே அவர் ராஜினமாச் செய்திருக்கின்றார்.

அச் சீக்கியத் தீவிரவாதி மீது கனடா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ஓ-எ)

## தடைநீக்கம்

வாஷிங்டன், செப். 13

அமெரிக்க எண்ணைக் கம்பனிகள் சிரிய அரசுடன் தொடர்பு கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்க அரசு நீக்கிவிட்டது. (ஓ-எ)

## கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர் கொல்லப்பட்டனர்

மணிலா, செப். 13

பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு அருகில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஏழு கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக் காரர்கள் கொல்லப்பட்டனர்.

6 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். (இ-எ)

வெளி உலகில்

ஈரானில்

## பொதுச்செயலாளர் பேச்சுக்களை ஆரம்பித்தார்

தெஹ்ரான், செப் 13

ஈரான் பிரதமர் முஸாவி, வெளிநாட்டமைச்சர் அக்பர் வேலாயதி ஆகியோருடன் ஐ நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் சனிக்கிழமை தனது பேச்சுக்களை ஆரம்பித்தார்.

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இப்பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

ஈரான் வெளிநாட்டமைச்சருடன் பொதுச் செயலாளர் பலதடவைகள் அடுத்தடுத்து பேச்சுக்கள் நடத்தினர்.

இந்த யுத்தத்தில் யார் ஆக்கிரமிப்பாளர் என்பதை அடையாளம் காணுவதில் பொதுச் செயலாளர் ஈடுபட்டிருக்கின்றார். என்று தெஹ்ரான் வானொலி அறிவித்தது. (இ-எ)

## முதலாவது விஜயம்

புருண்டி, செப். 13

புருண்டி நாட்டின் புதிய தலைவர் மேஜர் பியரி போயோசயர் நாட்டுக்கு முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அவர் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும். (ஓ-எ)

## அரபாத்தை முத்தமிட்ட 4 எம். பிக்கள் மீது வழக்கு

ஜெயரூசலம், செப்டெம்பர் 13

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டதற்காக நான்கு இஸ்ரவேல் எம்.பிக்கள் மீது இஸ்ரவேல் சட்டத்தை மீறியதாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

ஜெனிவாவில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் நான்கு இடதுசாரி எம். பிக்கள் அரபாத்தைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டனர். ஜெனிவாவில் ஐ.நா. மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட இஸ்ரவேல் நாடாளுமன்றக் குழுவில் இந்த நான்கு இடதுசாரி எம். பிக்களும், உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர்.

பலஸ்தீனரின் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக ஆராயவே இந்த ஐ. நா. மாநாடு நடத்தப்பட்டது. (இ-எ)

சென்னையில் சம்பவம்

## இலங்கை தமிழரின் வீட்டில் கொள்ளை

சென்னை, கே. கே. நகரில் வசித்து வரும் இலங்கைத் தமிழர் ஒருவரின் வீட்டில் நான்கு நபர்கள் புகுந்து 47ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

ஒரு நபர் ஸ்டென் துப்பாக்கியைக் காட்டி வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்த ஏனையோர் கொள்ளையை நடத்தினர்.

சென்ற புதன்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

குடும்பத் தலைவரான திரு. ஜோசப் (35வயது) கொள்ளை சம்பந்தமாக பொலீஸில் முறைப்பாடு செய்தார்.

இக் கொள்ளைச் சம்பவத்தில் இலங்கைத் தமிழ்ப்போராளிகள் சிலருக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (இ-எ)

பெரிய கம்யூனிஸ்ட்கட்சி எது?

# செல்வாக்கை நிரூபிக்க ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சென்னை, செப் 13

தமிழ் நாட்டில் யாருடைய கம்யூனிஸ்ட் கட்சிக்குச் செல்வாக்கு உள்ளது என்பதை நிரூபிக்க திருச்சி அல்லது சென்னை நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றுநடத்தப்படவிருக்கின்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினால்வெளியேற்றப்பட்ட திரு. எம். கல்யாணசுந்தரம்நடத்தவிருக்கின்றார்.

அவரே இத்தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினால்வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து புதிய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றை திரு. கல்யாணசுந்தரம் தொடக்கி உள்ளார்.

புதிய கட்சியின் மாநிலக் கவுன்ஸில் கூட்டம் குடியாத்தம் நகரில் சென்ற நான்காம் திகதி தொடக்கம் மூன்றுதினங்கள் வரை நடைபெற்றது.

அதன் பின்னர் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் தான் திரு. கல்யாணசுந்தரம் 'பலம் காட்டும் ஆர்ப்பாட்டம்' பற்றிய தகவலைத் தெரிவித்தார். (இ-எ)

# மெய்ஞானம் ஒளிர்ந்திட வழிகாட்டும் பகவத்கீதை

இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி. இப்புண்ணிய தினம் விஷ்ணு ஆலயங்களில் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகின்றது. அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

மன மயக்கமுற்றவன் தயங்குகிறான். தயங்கித் தயங்கி, மேற்கொண்டு இயங்க முடியாமல் தவிக்கிறான். இத்தகைய அவல நிலையில், போர்க்களத்தின் நடுவே, தேர்த் தட்டில், வில்லைக் கை நழுவி விட்டு, சோகத்தில் ஆழ்ந்து நின்ற அர்ச்சுனனைப் பார்த்து,

'விஜயன் என்றல்லவா உன்னை அழைக்கிறார்கள். விஜயன் என்றால் வெற்றிக்குரியவன் என்பதல்லவா அர்த்தம்! அத்தகைய நீயா உனது சுதர்மத்தை மறந்து சோர்வடைகிறாய்

இன்ப துன்பம், வெற்றிதோல்வி, இலாப நட்டம் ஆகிய இருமைகளைச் சமமாகக் கருதி, நடுநிலை நின்று க்ஷத்திரியனாகிய நீ உனது சுதர்மமாகிய போரைப் புரிந்திடு. பலனைத் துறந்திடு' என ஆன்மீக உபதேசம்செய்தார்கிருஷ்ண பரமாத்மா.

இவ்வரிய உபதேசம் எழுநூறு சுலோகங்களைக் கொண்ட பகவத்கீதையாக பாரத காவியத்திலே என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

'மானிட வாழ்க்கையை வெள்ளை கறுப்பு ஆகிய இருவகை நூல் கொண்டு நெய்த ஆடை என்று பாரதம் கூறுகின்றது. வியாச பகவான் தாம் சார்பற்று தனித்து நின்று கொண்டு உலகின் பரந்த சம்சாரத்தின்— இருளும் ஒளியும் கலந்த, நைந்த சித்திரத்தை திரையிலிட்டுக் காட்டுகிறார்' என விநோபாஜி தமது கீதைப் பேருரையில் கூறியுள்ளார்.

'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார். பெருமை



பிறங்கிற்று உலகு' என்னும் திருக்குறளில் பிறப்பு இறப்பு, இன்ப துன்பம், இருள் ஒளி, தண்மை வெண்மை, வெற்றி தோல்வி,இலாப நட்டம் என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது என வள்ளுவப் பெருந்தகை பகர்ந்துள்ளமையையும், [illegible] ஞானமும் இல்லை

நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல
தேவரும் ஆவர்'
நடுவு நின்றார் வழி
நானும் நின்றேனே

எனத் திருமூலர் திருமந்திரத்தில் கூறியதையும் கீதையுடன் ஒப்பு நோக்குதல் நலம்தரும்.

'பகவத்கீதை ஒரு படகு போன்றது. தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட கட்டிலிருந்து மனிதனை அவனுடைய இயற்கையான சுதந்திரத்திற்கு அது ஏந்திச் செல்கிறது

இருளிலிருந்து ஒளிக்கும், ஒளியிழந்த நிலையிலிருந்து ஒரு பேரொளிக்கும் மனிதனை அது அழைத்துச் செல்கிறது. இழுக்கமென்பது இல்லாத பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தோடு மனிதனைப் பிணைக்கும் வாசனைகளின் கலப்புகள் நீங்கியஒழுங்கங்களையும், கடமைகளையும் அவனுக்குக் கீதை ஏற்படுத்தியிருக்கின்றது.

உண்மையைச் சொல்லப்போனால் தனக்குரிய தர்மங்களைச் செய்வதற்காகத்தான் இந்தக் கர்ம க்ஷேத்திரத்திற்குள் செயற்களத்திற்குள் மனிதன் வந்து சேர்ந்திருக்கிறான். அந்தச் உபதேசம் அடிப்படைப் பாடம்.


## கரவை கிழார்

கீதை வேதங்களினுடைய கருத்துக்களின் சாரம்... இது அர்ச்சுனனுக்கு மட்டும் ஏற்பட்ட அவலமல்ல. [illegible] ஏற்பட்டதுதான் ஆனால் கீதையின் மதிப்பு பொதுவானது என்றுமுள்ளது. கீதையைப் படிப்பது என்றால் மயக்கம் என்ற கடலை நீந்திக் கடக்கும் கலையைக் கற்பதாகும் பகவான் கண்ணனின் குரலே கீதை.

பல இலட்சக்கணக்கான மக்களுக்கு ஆறுதலையும் விடுதலையையும் அது அளித்திருக்கிறது என்பதே அது தெய்வத்தினிடமிருந்து தோன்றியது என்பதற்குச் சான்றாகும். அத்தகைய தொருமாட்சிமையைத் தெய்வத்திற்குக் குறைந்த யாரும் அதற்குத் தந்திருக்க முடியாது.

கீதை தொடங்கும் விதம் முடியும் விதம் இவைகளே அது விளக்கும் தத்துவம் என்னவாயிருக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன. 'தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே' என்று தர்மம் என்ற சொல்லை முதலில் வைத்து ஆரம்பிக்கிறது. கடைசியாக பதினெட்டாவது அத்தியாயத்தின் கடைசிச் சுலோகம் 'யத்ரயோகேச்வர கிருஷ்ண' என்று தொடங்குகிறது. இந்த யோகேச்வர என்ற சொல் கீதையில் சொல்லப்படும் தர்மத்தைச் சுருக்கிச் சொல்கிறது. இவ்வாறு கீதோபதேசத்

((6ம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

**குறள்:**

கூழும் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிக் சூழாது செய்யும் அரசு.

**பொருள்:**

(ஆட்சிமுறை கெட்டுக்) கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையும் செய்யும் அரசன், பொருளையும், குடிகளையும் ஒருசேர இழந்து விடுவான்.

சமய சந்திகளில்

## ஆனைக்கோட்டை மூத்த நயினர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், செப்.14

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலயத்தில் இன்று கிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு, மகாசுதர்சன ஹோமமும் ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம், பூஜை என்பன நிகழும்.

நாளை செவ்வாய்க் கிழமை கும்பாபிஷேக தின சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து பணவாளக் கோல உற்சவம் நடைபெறும். (ஓ)

## இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம், செப் 14

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ரதோற்சவம் இன்று பகல் நடைபெறும்.

காலை 9 மணியளவில் பெருமாள் ரதத்தில் ஆரோகணித்து வீதி வலக் காட்சி இடம் பெறும். (ஓ)

## எம். பிமாருக்கு சோதனை இல்லை!

கொழும்பு செப், 14

நாடாளுமன்றக் கட்டடத்தினுள் பிரவேசிக்கும் எம். பிக்கள் இனி உடல் ரீதியான சோதனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

புதிய பகதுகாப்பு நடவடிக்கையின் படி எம். பிக்களும் சாதாரண பொது மக்களைப் போன்று பொலீஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே நாடாளுமன்றத்துக்குள் அனுமதிக்கப்பட வேண்டும். கடந்த புதன் வரை அப்படியே சோதனை செய்யப்பட்டு வந்தனர்.

புதன்கிழமையில் இருந்து அப்படிச் சோதனை செய்யப்படுவதை நிறுத்தும்படி பொலீஸாருக்கு உத்தர விடப்பட்டு உள்ளது. (ஓ எ)

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், செப்14

சாவகச்சேரி- அருள் மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை முதல் 23.9.87 புதன்கிழமை வரை பத்துத் தினங்களுக்கு இலட்சார்ச்சனை நடைபெறும் (ஓ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

* அபிஷேகப் பொருள்கள்
* புதுமனை அத்திவாரப் பொருள்கள்
* நாள் சரக்குகள்
* விவாக முகூர்த்தப்பொருள்கள்
* கோவில் சங்காபிஷேகப் பொருள்கள்
* கும்பாபிஷேகப் பொருள்கள்
* அஷ்டபந்தன மருந்து

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

14 - 09 - 1987 திங்கட்கிழமை



திறம் விளைவுகூடம், பச்சைச்சந்தனம், பைசூர்ச்சந்தனம், No. 1 குங்குமப்பூ, ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சகல பொருள்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.


## சம்பள உயர்வுடன் புதிய உணவுமுத்திரை

### அரசு ஆலோசனை

கொழும்பு, செப் 14
சம்பள உயர்வுடன் புதிய உணவு முத்திரைத் திட்டம் ஒன்றும் அமுல் நடத்தப்படும் என்று அரசவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக அரசு உயர் மட்டத்தில் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது மாத வருமானம் 700 ரூபாவுக்கு உட்பட்டவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்படுகிறது.

புதிய திட்டத்தின் கீழ் வருமான எல்லையை ஆயிரம் ரூபா ஆக அதிகரிப்பதா என்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.

அப்படி அதிகரிக்கப்பட்டால் புதிய உணவு முத்திரைத் திட்டம் இன்னும் பலருக்குப் பயன் அளிக்கும் என்று கூறப்படுகின்றது

வேறு வருமானம் இல்லாத பென்ஷனியர்களும் புதிய திட்டத்தின் கீழ் பயனடைவர் என்றும் தெரிகின்றது. (ஒ-எ)

## பூஸா முகாம் கைத்தொழில் பேட்டை!

கொழும்பு, செப். 14
பூஸா இராணுவத் தடுப்பு முகாம் கைத்தொழிற்பேட்டையாக்கப்பட வேண்டும்.

வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் எம். எஸ். அமரசிரி அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்து உள்ளார்.

கைத்தொழிற்பேட்டையை நிறுவுவதற்கான பூர்வாங்க வேலைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (ஒ-எ)

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
காங்கேசன்துறை] சதிக் கும்பல்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ராஜேந்தர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மரணமடையும் தறுவாயில் அளித்த வாக்குமூலத்தில் இப்படுகொலைக்கு காரணமானவர்கள் புளொட் அமைப்பைச் சேர்ந்த சதிக் கும்பல்களே என்று கூறியுள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும், விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும் வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்படி தமிழீழ விடுதலைப்புலிகளினால் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## நாளைய ஊர்வலத்துக்கு "கைஸ்" ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 14
யாழ் பல்கலைக் கழக மாணவர் போராட்டக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நாளை 15ஆம் திகதி நடத்தப்பட இருக்கும் எதிர்ப்பு ஊர்வலத்திற்கு மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) ஆதரவு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக கைஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சகோதரர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் -

அரச ஒடுக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும்-

இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## ராஜீவுக்கு கைதிகள் கடிதம்

மட்டக்களப்பு, செப். 14
பெலவத்தை தடுப்பு முகாமிலுள்ள 113 தமிழ் பேசும் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள். (ஒ-21)

## ஈரோஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், செப் 14
கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரி ஒன்றில் வெளியான ஒரு செய்தி குறித்து ஈரோஸ் இயக்கம் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

கொழும்பில் இருந்து வெளிவரும் அரசாங்க சார்பான தமிழ்த் தினசரி ஒன்றில் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரசாரத்தை மக்களுக்கு அம்பலப்படுத்த விரும்புகின்றோம்.

இப்பத்திரிகையில் ''அமைச்சர் இராசு வீட்டில் ஈரோஸ் உறுப்பினர் கைது'' என்றும் ''காத்தான் குடியில் அலுவலகத் திறப்பில் ஈரோஸ் தகராறு'' என்றும் குறிப்பிட்டு வெளிவந்த செய்தியை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

இது தொடர்பாக எமது கிழக்குப் பிராந்திய பொறுப்பாளர் கொடுத்த மறுப்பினை இப்பத்திரிகை பிரசுரிக்கவில்லை.

எமது உறுப்பினர் எவரும் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.

நாம் ஏட்டிக்கு போட்டியாக எமது அலுவலகம் எதனையும் ஆரம்பிக்கவில்லை. காத்தான் குடியில் தனிப்பட்ட நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களில் எமது பெயர் வேண்டுமென்று தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக தெரிகின்றது. இத்தகைய தகராறுகளில் நாம் என்றும் ஈடுபட்டது இடையாது. இனி மேலும் ஈடுபடமாட்டோம் என்பதை தமிழ் பேசும் மக்களுக்கு தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## இரத்தம்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திருந்தார்

சம்பவம் குறித்து பிலிப் அந்தோனிப் பிள்ளை மேலும் கூறியதாவது;

அதிகாலை ஐந்துமணி அளவில் திடீரென வெடிச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டன.

வெளியே எழுந்து ஓட முடியாத நான் வீட்டினுள் படுத்திருந்தேன்.

சுமார் ஒருமணி நேரமாக நடைபெற்ற இம் மோதல் ஓய்ததும் நான் வெளியே வந்தேன்.

அப்பொழுது கடற்கரைப் பகுதியில் மூன்று சடலங்கள் இரத்தம் உறைந்த நிலையில் கிடப்பதைக் கண்டேன்.

வேறு சிலர் காயங்களுடன் அங்கு இருப்பதையும் கண்டேன்.

இத்தாக்குதலில் எனது உறவினரான கனகசபை சாரதாம்பாளும் காயமடைந்தார்.

இயக்க மோதலை அடுத்து அந்தக் கிராமத்தில் உள்ள சனங்கள் எல்லாம் ஓடிவிட்டார்கள்.

இப்படி அவர் தெரிவித்தார். [இ-எ]

## கிளிநொச்சிப் பகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
முல்லைத்தீவைச் சேர்ந்த போராளி-கமல் ஆகியோரது சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டன.

இவற்றில் மாணிக்கம் மோகன் என்பவரது சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு எடுத்துச்செல்லப் பட்டது

ஏனைய மூவரது சடலங்களும் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

போராளியான ராஜேந்தர் என்பவரது சடலம் அடையாளம் காணும் பொருட்டு உறவினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, பரந்தன் பகுதியில் ஒருவரது சடலம் இதுவரை எவராலும் எடுத்துச் செல்லப்படவோ அடையாளம் காட்டப்படவோ இல்லையெனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. மற்றும் சில இயக்கப் போராளிகளைக் காணவில்லை எனவும் கூறப்படுகிறது.

இதே வேளை சனிக்கிழமை இளைஞர்கள் சிலர் பரந்தனில் வாகனச் சோதனைகளை மேற்கொண்டிருந்ததாகவும் பின்னர் அதனை இந்திய இராணுவத்தினர் கட்டுப்படுத்தி, அந்த இளைஞர்களை அழைத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த இயக்க மோதல்களில் இறந்தவர்களது சடலங்கள் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-76

## 3000 பேர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளனர்

2 ஆயிரம் பேர் வரையில் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஏனையோர் தடுப்பு முகாம்களிலும் பொலீஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

## ஈழவர் முன்னணி ஆதரவு

ஸ்ரீ லங்கா இராணுவ முகாம்களில் உள்ள இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி நடத்தப்படும் போராட்டங்களுக்கு ஈழவர் முன்னணி ஆதரவு வழங்க முன்வந்துள்ளது (இ-10

## ஒப்பந்தம் பற்றி நீலன் பேசுவார்

கொழும்பு, செப். 14
இந்திய—இலங்கை ஒப்பந்தம்பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் எதிர்வரும் 22ஆம்திகதி மாலை மாளிகாவத்தை இலங்கை இஸ்லாமிய நிலையத்தில் பேசுவார்.

மார்கா இன்ஸ்டிடியூட் இயக்குநர் கோட்பிரே குணதிலகவும் எதிர்வரும் 23ஆம் திகதி இதே விஷயம் குறித்துப் பேசுவார்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது இரண்டு கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பார். (இ-எ)

## யாழ் மாவட்டத்திலும் மரம் நடுகை

கொழும்பு, செப் 14
மரம் நாட்டும் இயக்கம் யாழ் மாவட்டத்திலும் நடத்தப்படும்.

இம்மாதம் 17 ஆம் திகதி மரம் நாட்டும் இயக்கம் நாடு முழுவதும் ஆரம்பமாகி 12 வாரங்களுக்குத் தொடரும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் 81ஆவதுபிறந்த தினத்தை ஒட்டி ஆண்டு தோறும் இந்த இயக்கம் நடத்தப்படுகின்றது. (இ-எ)

## மெய்ஞான--

(3ம் பக்கத் தொடர்ச்சி)
தின் நோக்கம் இது தான் என்பது தெளிவாகிறது தர்மத்தை நினை; தர்மத்தைச் செய்!

அர்ச்சுனன் கண்ணனிடம் என்றும் அழியாத பூரண மெய்யின்பத்தைக் கேட்டான். மனிதன் தன் முயற்சியினால் பெறக்கிடைக்கிறது பிரேயஸ் தன் செயலினால் அவன் அதையடைய முடியும். நானே முயற்சி செய்தால் அடையக்கூடிய ஒன்றை உன்னிடமிருந்து கேட்டுப் பெறுவானேன்?

நான் அவ்வளவு முட்டாள் அல்ல என்னுடைய சொந்த முயற்சியினால் அடையமுடியாத சிரேயஸ்ஸை நீதான் கொடுக்க வேண்டும். அது செயலினால் பெற முடியாது அருள் ஒன்றினால் மட்டுமே கிட்டும் என்றான் அர்ச்சுனன்.

இவ்வாறு சரணாகதி என்றும் பரபத்தி என்றும் அழைக்கப்படும். பூரண அடைக்கலத்தின் உச்சிக்கே போய்விட்டான் அர்ச்சுனன் எனப் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா 'கீதாவாஹினியில்' எழுதியுள்ளார். செல்வம் உடையதவராதலும் வேறு; தெளிந்த மெய்யறிவு உடையராதலும் வேறு என்ற பொருள் பொதிந்த பின்வரும் திருக்குறளையும் ஒப்பு நோக்குதல் நன்று.

''இரு வேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு

## இயக்கங்களே !...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள்.

இவற்றுக்குப் பதிலளிக்கும் விதத்தில், ஈரோஸ் பிரமுகர் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த பல போராளிகள் அண்மைக் காலத்தில் கொல்லப்பட்டுள்ளனர். இன்னமும் சிலர் இனந்தெரியாதோரால் கடத்தப் பட்டுள்ளனர் அதுமட்டுமல்லாமல் இயக்கங்களிலிருந்து விலகியவர்கள் ஆதரவாளர்கள் கூட வீட்டில் இருக்க முடியாது ஒழிந்து திரிகின்றனர்.

இந்நிலை நீடிக்குமாயின் மக்கள் விடுதலை இயக்கங்களை வெறுக்க வேண்டிய நிலை கட்டாயமாக ஏற்படும்.

இனிமேலாவது பழைய முரண்பாடுகளை மறந்து, நாம் தவறிழைத்திருந்தால் அவற்றைத் தொடராமல் சரியான அணுகுமுறைகளைக் கையாண்டு வரவேண்டும். தமிழ் பேசும் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நாம் எந்தெந்த நடவடிக்கையினூடாக ஒன்றுபட [illegible] முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதைச் [illegible] செய்யத் தவறுவோமாயின் தமிழ் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படும். பிற்போக்கு சக்திகளின் ஆதிக்கமே நிலையூன்றும்.

ஒரு விடுதலைப் பயணத்தில் எத்தனையோ பிரச்சினைகள் ஏற்படலாம். அவற்றை வரலாற்று ரீதியில் அணுகி திருத்திக் கொள்ள வேண்டும். விமர்சன ரீதியாகப் பிழைகளை அணுகித் தீர்த்துக் கொள்வதே சிறந்த வழியாகும். இதையே ஈரோஸ் இயக்கம் என்றும் கடைப்பிடித்து வருகிறது.

இன்று எமக்கு வரக்கூடிய பாரிய ஆபத்துக்களை விடுதலை இயக்கங்களும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்தப் பிரமுகர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஈழவர் முன்னணிப் பிரமுகர்களும் ஈரோஸ் பிராந்தியச் செயலாளர்கள் திரு. மோகன், திரு. கருணன், திரு. [illegible] திரு. முரளி ஆகியோரும் கலந்து கொண்டனர். [அ]


அதிர்ஷ்டசாலி நீங்களா ?

1987 உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு

ஷப்ரு நிதி நிறுவன ஆதரவில் உதயன் நடத்தும் கிரிக்கெட் புதிர்

உலக கிண்ண போட்டிகளைப் பற்றி உங்களுக்குள்ள பரிச்சயத்தைப் பரீட்சிக்கும் இப் புதிர் போட்டிக்கு நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு தான்.

1. உதயன் – சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்களை வெட்டியெடுத்து அதில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான விடைகளை ஊகித்துக் கொள்ளுங்கள்.
2. நீங்கள் ஊகித்துச் சரியெனக் கருதும் விடைகளை கூப்பன்களில் எழுதுங்கள்.
3. நிரப்பிய கூப்பன்களை உதயன் – ஷப்ரு நிறுவனங்களில் இதற்கென வைக்கப்படும் பெட்டிகளிலோ அல்லது தபால் மூலம் ''கிரிக்கெட் புதிர் போட்டி'' நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
4. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். சரியான விடையை ஊகித்து அறியும் அதிர்ஷ்டசாலிக்கே பரிசு வழங்கப்படும்.
5. கூப்பன்களில் நிரப்பப்படாத விடைகள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா
6. உதயன் – ஷப்ரு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

கிரிக்கெட் புதிர் போட்டியில் வென்று அதிர்ஷ்டசாலியாகி வெகுமதியான பரிசில்களை வெல்லுங்கள்.

ஷப்ரு ஆதரவில்
உதயன் நடத்தும்
உலக கிண்ண கிரிக்கெட் புதிர்

Reliance CUP 1987

பெயர்: ______
முகவரி: ______

இம் முறை உலக கிண்ணத்தை வெல்லப் போகும் நாடு எது? . . . . . . . .

இம் முறை இரண்டாவது இடம் எந்த நாட்டுக்கு கிடைக்கும்? . . . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களை எந்த நாடு எடுக்கும்? . . . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்களைப் பெறப் போகும் நாடு எது?

இந்தப் போட்டியில் இந்திய வீரர் சிறீகாந்த் சதம் பெறுவாரா? . . . . . . . .

☆ யாழ் சைனீஸ் ☆
★ றெஸ்ரோரன்ட் ★
(பி. வி. ரி) லிமிட்டெட்.
YARL CHINESE RESTAURANT
P. V. T. (LTD)

அறிவித்தல்

எங்கள் றெஸ்ரோரன்ட் (14 - 9 - 87) இன்று தொடக்கம் எமது முன்னைய இடமாகிய 124, R. R. நல்லையா வீதி, (பழைய முதலாம் குறுக்குத் தெரு) வில் இயங்கும் என்பதையும் எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதையும் அறியத்தருகிறோம்

★ தங்குவதற்கு வசதி உண்டு ★



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on 14 - 09 - 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org